**M.C.O.P. No.122/2025**

**Deposition of P.W. 1**

**Dated : 30.03.2026**

**Name : மணிகண்ட பிரசாத்**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

தற்போது எனக்கு 52 வயதாகிறது. பிரமாண வாக்குமூலத்தில் 47 என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 வது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரிதான். 1 வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் பதிவெண் TN 69 AL1315 Yamaha FX என்றால் சரிதான். அந்த வாகனம் 3 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அந்த வாகனத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தன்று நான் தலைதகவசம் அணியவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தலைகவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனம் எனக்கு உரிமையானது என்றால் சரிதான். அந்த வாகனத்தை நான் 2 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துளளேன் என்றால் சரிதான். அந்த காப்பீட்டு சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. வாகனத்திற்கு FC சான்றிதழ் 9.6.2023 ம்தேதி காலவாதியாகியுள்ளது என்றால் தெரியாது. ம.சா.ஆ. 3 ஆவணத்தில் காலவதியாகிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாகனத்தை தலைகவசம் மற்றும் FC சான்றிதழ் இல்லாமல்

ஓட்டியதால் நான் RTO அலுவலகத்தில் அபராதம் செலுத்தினேன் என்றால் சரிதான். அதனால் 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் காப்பீடு நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரிதான்.

**<u>3 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் இல்லாததால் வாகனமானது பறிமுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். 1 வது எதிர்மனுதாரர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். விபத்தானது சாலையின் கிழக்கு பக்கத்தில் நடந்தது என்றால் சரிதான். நான் தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை எவ்வித சைகையும் செய்யாமல் வலது புறமாக ஓட்டி சென்று 1 வது எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும் சாலையின் இடது புறம் ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. எனக்கு எதிராக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். போலீசார் எனக்கு எதிராக தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கைக்கு எதிராக புகார் எதையும் கொடுத்தேனா என்றால் இல்லை. மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகஜர், மோட்டார்வாகன ஆய்வு அறிக்கை ஆகியவற்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. அந்த ஆவணங்கள் எனக்கு எதிராக இருந்ததால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டு என்பதால் இழப்பீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் 17 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சிகிச்சைக்கு பின்பு குணமடைந்து விட்டது என்றால் இல்லை. தற்போதும் தலைவலி உள்ளது. எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மா.சா.ஆ. 6 முதல் 11, 14 முதல் 25 ஆவணங்கள் அதிக இழப்பீடு பெறுவதற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 10 இல் உள்ள சீரியல் எண் 2,3,6 மற்றும் 7,9 ரசீதுகள் முன்பண ரசீது என்பதால் அதனை செலவு ரசீதாக ஏற்க முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 10 இல் உள்ள சீரியல் எண் 17,19,21 முதல் 23 ரசீதுகள் பறிந்துரை சீட்டுகள் என்பதால் செலவீன ரசீதாக ஏற்க முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.24 ரசீலும் முன்பணம் செலுத்தியது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மருத்துவமனைக்கு உள்ளே உள்ள மருந்து கடையில் தான் மருந்துகள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.24 ன் படி மருந்துகள் வாங்கியதற்கான தொகை ரூபாய் 46,696/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருந்துகளுக்கு உண்டான செலவு ம.சா.ஆ. 24 இல் திரும்பவும் குறிப்பிடப்பட்டுள்ளதால் அதனை கோரமுடியாது என்றால் தெரியாது. நான் தற்போது எந்த வேலையும் செய்வதில்லை. வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் வாழை வியாபரம் செய்து மாதம் ரூபாய் 25000/- வருமானம் ஈட்டிவந்தாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வருமானத்தை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

விவசாயம் செய்து வருகிறேன். மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் விவசாயம் செய்து வந்தாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னால் தற்போது எல்லா வேலையும் செய்யமுடியும் என்றால் முடியாது. எனக்கு வருவாய் இழப்பு மற்றும் வருவாய் ஈட்டு திறன் இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் செலவுகள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ரூபாய் 17 இலட்சம் மருத்துவ செலவுகள் ஏற்பட்டதாக மனுவில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பலமாதங்கள் பிசியோதெரபி சிகிச்சை எடுத்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முன்பு போல் என்னால் நாள்தோறும் எந்த வேலைக்கு சொல்லமுடியவில்லை என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அடிக்கடி தலைவலி, சலிதொல்லை ஏற்பட்டு காய்ச்சல் ஏற்படும் என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பல்வேறு தரப்பில் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 3 வது எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.